[1979 மார்ச் 26

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதையும் அவைத் தலைவர் அவர்களின் அறையில் போய்க் கேட்டுக் கொள்ளலாம்.

(6) கவன ஈர்ப்புகள்.

(அ) பல்லடம் தாலூகாவில் பல விவசாயிகள் மீது பைப் லைன் வரி, மேல்வரி, என அதிகமாக வரிகள் போட்டு வசூலிப்பது குறித்து.

திரு. க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''கோவை மாவட்டம் பல்லடம் தாலூகா, சூலூர், கண்ணம் பாளையம், குருகூர், ராவத்தூர், நிலம்பூர், சாமளாபுரம் போன்ற கிராமங்களில் உள்ள விவசாயிகள் மீது பைப்லைன் வரி, மேல்வரி அதிகமாகப் போட்டு, கெடுபிடி வசூல் செய்ய முனைந்துள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1977-ம் ஆண்டுக்கு முன்பு அரசு நிலங்களில் குழாய்கள் மூலம் தண்ணீர் கொண்டு செல்வதற்கு வருவாய்த்துறை வாரிய நிலை ஆணை 24-ஏ (9) (d)-யின்படி கீழ்க்கண்ட பாதை வரிக்கட்டணங்கள், வசூலிக்கப்பட்டு வந்தன.

பெரிய நகராட்சி	மைலுக்கு ரூபாய் 220 அல்லது ஒரு கெஜத்துக்கு 13 பைசா.	குறைந்த பட்சம் ரூபாய் 6.
சிறிய நகராட்சி	மைலுக்கு ரூபாய் 165 அல்லது ஒரு கெஜத்துக்கு 10 பைசா.	குறைந்த பட்சம் ரூபாய் 4.
மற்ற நகரங்கள்	மைலுக்கு ரூபாய் 110 அல்லது ஒரு கெஜத்துக்கு 7 பைசா.	குறைந்த பட்சம் ரூபாய் 2.
கிராமப் பகுதிகள்	மைலுக்கு ரூபாய் 82.50 அல்லது ஒரு கெஜத்துக்கு 5 பைசா.	குறைந்த பட்சம் ரூபாய் 2.
சென்னை நகரம்	மைலுக்கு ரூபாய் 1,000	..

1979 மார்ச் 26] [திரு. எஸ்.டி. சோமசுந்தரம்]

2. மேற்கண்ட பாதை வரிக் கட்டணங்கள் 25 ஆண்டுகளுக்கு முன்னர் விதிக்கப்பட்டவை. தற்போது நிலங்களின் மதிப்பு உயர்ந்துள்ளதால் வருவாய் வாரியம் பாதை வரிக் கட்டணங்களைத் திருத்தி அமைக்க சிபாரிசு செய்தது. வருவாய் வாரியத்தின் சிபாரிசை ஏற்று அரசாணை (நிலை) எண். 1747, வருவாய், தேதி 1977-ம் வருடம் செப்டம்பர் மாதம் 8-ம் தேதியில் கீழ்க்கண்டவாறு பாதை வரிக் கட்டணங்களை மாற்றி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

I (i)	தனி நிலை, தேர்வு நிலை நகராட்சிகள்.	1 கி. மீட்டருக்கு ரூ. 300 அல்லது 1 மீட்டருக்கு 30 பைசா.	குறைந்த பட்சம் ரூ. 15.
(ii)	முதல் அல்லது இரண்டாம் நிலை நகராட்சிகள்.		
II	மூன்றாம் நிலை நகராட்சிகள்.	1 கி. மீட்டருக்கு ரூ. 300 அல்லது 1 மீட்டருக்கு 30 பைசா.	குறைந்த பட்சம் ரூ. 10.
III	நகர் பஞ்சாயத்து வட்டாரங்கள்.	1 கி. மீட்டருக்கு ரூ. 150 அல்லது 1 மீட்டருக்கு 15 பைசா.	குறைந்த பட்சம் ரூ. 7.
IV	கிராம பஞ்சாயத்து வட்டாரங்கள்.	1 கி. மீட்டருக்கு ரூ. 100 அல்லது 1 மீட்டருக்கு 10 பைசா.	குறைந்த பட்சம் ரூ. 5.
V	மதுரை மாநகர் ..	1 கி. மீட்டருக்கு ரூ. 500.	குறைந்த பட்சம் ரூ. 25.
VI	சென்னை மாநகர்	1 கி. மீட்டருக்கு ரூ. 2,000	குறைந்த பட்சம் ரூ. 100.

3. கிராம பஞ்சாயத்து, நகர பஞ்சாயத்துக்களில் ரூபாய் 2 ஆக இருந்த பாதைவரிக் கட்டணங்கள், கிராம பஞ்சாயத்துக்களில், ரூ. 5 ஆகவும், நகர பஞ்சாயத்துக்களில் ரூ. 7 ஆகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. நில வருவாயில், பாதைவரிக் கட்டணங்கள், குத்தகைப்பணம், நிலத்தீர்வை, உரிமை ஊதியம் ஆகியவை அடங்கும். தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம், 1958, 115 பிரிவின்படி நில வருவாய் ஒவ்வொரு

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1979 மார்ச் 26

ரூபாய்க்கும் உள்ளூர் செஸ் 45 பைசா வீதம் வசூல் செய்ய வேண்டும். அதே போல் 116 பிரிவின்படி நிலவருவாய் ஒவ்வொரு ரூபாய்க்கும் உயர்ந்த பட்சம் ரூபாய் 2.50 வீதம் உள்ளூர் செஸ் மேல்வரி வசூல் செய்யலாம். புதிய விகிதத்தில் பாதைவரிக் கட்டணம் கணக்கிடும்போது உயர்த்தப்பட்ட விகிதத்தில் உள்ளூர் மேல்வரியும் கணக்கிடப்படுகிறது.

4. சூலூர், பஞ்சாயத்து ஒன்றியம் ரூபாய் 0.75 என்று இருந்த உள்ளூர் செஸ் மேல் வரியை ரூ. 2.05 வீதம் உயர்த்தியும் பல்லடம் பஞ்சாயத்து ஒன்றியம் ரூபாய் 0.75 என்று இருந்த உள்ளூர் செஸ் மேல் வரியை ரூபாய் 1.55 வீதம் உயர்த்தியும் வசூல் செய்கிறது. கோவை மாவட்ட தேசிய உழவர் சங்க செயலாளரிடமிருந்து இது சம்பந்தமாக மனு வந்துள்ளது. தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம், 1958 பிரிவு 115, 116-ஐ திருத்தி அமைக்கும் வரையில் பாதைவரிக் கட்டணங்கள் மீது உள்ளூர் செஸ், உள்ளூர் செஸ் மேல்வரி வசூலிக்க வேண்டி உள்ளது. அரசாணை எண். 1747, வருவாய், நாள் 1977 செப்டம்பர் 8-ன்படி உயர்த்திய பாதை வரிக் கட்டணங்கள் பல்லடம், சூலூர் பஞ்சாயத்து வட்டாரங்களுக்கு மட்டும் அல்லாமல் எல்லா மாவட்டங்களில் இருக்கும் விவசாயிகளுக்கும் பொருந்தும். ஆகையால் கோவை மாவட்டம், பல்லடம் தாலூக்கா, சூலூர் ஒன்றியத்தைச் சேர்ந்த சூலூர், கண்ணம் பாளையம், குருகூர், ராவத்தூர், நீலம்பூர், பல்லடம் ஒன்றியத்தில் சாமளாபுரம் போன்ற கிராம விவசாயிகள் மீது பழி வாங்கும் நோக்குடன் பாதை வரிக்கட்டணங்கள் அதிகமாக விதிக்கவில்லை. அதன் பொருட்டு கெடுபிடி வசூலும் இல்லை. எனவே பதட்ட நிலைக்கோ, கொந்தளிப்பு நிலைக்கோ யாதொரு காரணமுமில்லை. பாதைவரிக் கட்டணங்கள் (Track rent) அதிகரிப்புக்கு முக்கியமான காரணம் உள்ளூர் மேல்வரித் துகைகள் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன்களால் பெருமளவில் அதிகப்படுத்தப்பட்டதேயாகும்.

திரு. க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்டிருப்பது விவசாயிகள் சம்பந்தமானது. நீங்கள் சொல்லியிருப்பது நகராட்சி சம்பந்தமானது. விவசாயிகள் விவசாயம் செய்வதற்காக ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு பைப் போட்டு, அவர்களாகவே தண்ணீர் கொண்டு போகிறார்கள். இதிலே சர்க்காருக்கு பொறுப்பில்லை. அப்படி பைப் போட்டு தண்ணீர் கொண்டு போவதிலே அவர்கள் கஷ்டப் படுகிறார்கள்; நஷ்டப்படுகிறார்கள். அந்த நிலையிலே அவர்கள் குறைகள் தீர்க்கப்படாமல், அவர்கள் உண்ணாவிரதம் இருக்கப்போவதைப் பற்றிக்கூட அன்றைக்கு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அப்படி இருக்கும்போது, அவர்கள் இந்த பைப் லைன்களில் தண்ணீர் கொண்டு போவதற்கு 200 சதவீதம் 300 சதவீதம் என்று டாக்ஸ் போடுவது இந்த டாக்சேஷன் பாலிசிக்கே விரோதமானது. இது ஒரு சூபர் டாக்சாக இருக்கிறது.

1979 மார்ச் 26] [திரு. க. சுப்பு]

ஆனால் இன்றைக்குக் கேள்விப்படுகிறோம், அவர்கள் மாட்டைப் பிடித்துக் கொண்டு போகிறார்கள். அவர்கள் அக்ரிகல்சுரர் இம்பிளிமென்ட் சாமான்களை ஜப்தி செய்து கொண்டு போகிறார்கள் என்று. அப்படியென்றால் இது போதாதா?......

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : கேள்வியாகக் கேளுங்கள், விளக்கமாகப் பேசுவதாக இருந்தால், மானியம் வரும்போது பேசலாம். அப்போது பதில் சொல்கிறேன். இப்போது கேள்வியாகக் கேளுங்கள். பதில் சொல்கிறேன்.

திரு. க. சுப்பு : துணைத் தலைவர் அவர்களே, இந்த விவசாயிகள் விவசாயம் செய்வதற்காக அவர்களே பைப் லைன் போட்டுக்கொண்டு தண்ணீர் எடுத்துக்கொள்கிறார்கள். அவர்களுக்கு இந்தத் தண்ணீர் வரி விதிக்கப்படுகிறது. அதைக் கட்டவில்லையானால், மாட்டைப் பிடித்துக் கொண்டு போகிறார்கள். அக்ரிகல்சர் இம்பிளிமென்ட்டுகளை ஜப்தி செய்கிறார்கள். அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் என்ன சொல்ல விரும்புகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 11.20.]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : விவசாயிகளுக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்கு பைப் மூலமாகத் தண்ணீர் கொண்டு வரும் வரியைத்தான் சொன்னேன். அதைச் சொல்லுகிறபோது நான் நகராட்சி, ஊராட்சி என்றெல்லாம் சொல்வதற்குக் காரணம் எந்தெந்த ஊர்களுக்குக் கொண்டு போக எப்படி வரி போடப்பட்டிருக்கிறது என்றுதான் சொன்னேன். அந்த வரிகள் எல்லாம் இந்த அரசு கொண்டு வந்தது அல்ல. நீண்ட பல காலமாக இப்படி வரி போடப்பட்டிருக்கிறது. அது இப்போது மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. அதிகமாகப் போடப்பட்டிருக்கிறது என்பதைத்தான் சொன்னேன். அது மட்டுமல்ல, விவசாயிகள் சம்பந்தமான வரி வசூலிப்பதில் எங்கும் மாட்டையும் பிடிக்கவில்லை, ஆட்டையும் பிடிக்கவில்லை, அப்படி யாராவது பிடித்திருந்தால் திருடர்கள் பிடித்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

திரு. க. சுப்பு : தற்போது விதிக்கப்பட்ட வரி 200 சதவீதம், 300 சதவீதம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. விவசாயிகளுக்காக அதைக் குறைக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : 100 மடங்கு, 200 மடங்கு என்று உயர்த்தப்படவில்லை. ஆயினும் விவசாயிகள் நலனைக் கருதி இதுபற்றி வருவாய் வாரியத்தின் மூலமாகப் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.